பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 27 ஷஃபா: 25 இதழ்: 181

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-8-77


## எதிர்க்கட்சித் தலைவருக்கு கொழும்பில் வாசஸ்தலம்

### மோட்டார் வாகனமும் கிடைக்கும்

கொழும்பு, புதன்

தேசிய அரசுப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருக்கு கொழும்பில் ஒரு உத்தியோகபூர்வமான வாசஸ்தலம் வழங்கப்படும். இதனுடன் அவருக்கு, உத்தியோகபூர்வமான மோட்டார் வாகனமும் வழங்கப்படும்.

மேற்கண்ட முடிவு இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆலோசனையின் பேரிலேயே மேற்கண்ட முடிவு இன்று எடுக்கப்பட்டது.

# அமைச்சரவைக் கூட்டத்தில் அதிமுக்கிய தீர்மானங்கள்!

## உணவுப்பொருள் விநியோகத்துக்கு 20,000 விற்பனை நிலையங்கள்

### பழிவாங்கல் பற்றி ஆராய விசேஷ கமிட்டி நிறுவப்படும்

கொழும்பு, புதன்

**இன்று இங்கு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பல முக்கிய முடிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கியதேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சில முக்கிய அம்சங்கள் ஆறுமாத காலத்தில் கண்டிப்பாக அமுல் செய்யப்பட வேண்டும் என்றும் காலக்கிரமத்தில் தேர்தல் விஞ்ஞாபனம் முழுமையாகச் செயல்படுத்தப்படவேண்டும் என்றும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் வருமாறு

**சமாதான நீதவான்**

1970ம் ஆண்டுமுதல் 1977ம் ஆண்டுவரை நியமனம் பெற்ற சகல சமாதான நீதவான்களும் இவ்வருட டிசம்பர் மாதத்தில் பதவி இழப்பார்கள்.

இந்த நியமனங்கள் அரசியல் ரீதியிலேயே வழங்கப்பட்டன என்றும் தகுதி அடிப்படையில் அமைந்திருக்க வில்லை என்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

பிதிய ஜே. பி. நியமனங்கள் இனிமேல் அரசாங்க அதிபரின் சிபார்சுடன் தகுதி அடிப்படையில் அந்தந்தத் தொகுதி எம். பி.யின் ஆலோசனையுடனும், பொலிசாரின் உதவியுடனும் இடம் பெறும்.

**பழிவாங்கப்பட்ட ஊழியர்**

1970 மே 28ம் திகதிக்கு பின்னர், அரசியல் காரணங்களுக்காக அரசாங்க, தனியார் மற்றும் அரச கூட்டுஸ்தாபனங்களில் கடமையாற்றி பழிவாங்கப்பட்டவர்களின் நிலைமை பற்றி ஆராய விசேஷ கமிட்டி ஒன்று அமைக்கப்படும். இவர்களுக்கு மீண்டும் வேலைவழங்குவது, சொத்துச்சேதம் அல்லது குடும்ப அங்கத்தவர்கள் யாரும் கொலை செய்யப்பட்டிருந்தால் நஷ்டஈடு வழங்குவது பற்றி கமிட்டி முடிவுசெய்யும்.

**20,000 விற்பனை நிலையங்கள்**

அத்தியாவசிய உணவு மற்றும் பாவனைப் பொருள்களை மக்களுக்கு நியாய விலையில் விரைவாக வழங்க மேலதிகமாக 20,000 விற்பனை நிலையங்கள் நாட்டின் நாலா பகுதிகளிலும் அமைக்கப்படும். உணவுப் பொருள்களின்விலை, விநியோகம் பற்றி வாரந்தோறும் ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள விசேஷ அமைச்சரவைக்கூட்டமும் நடைபெறும்.

[6 ம் பக்கம்பார்க]

★ கடைசிச்செய்தி

எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்தின் காரியதரிசியாக திரு. இ. பேரின்பநாயகமும், லிகிதர்களாக திரு. க குலநாயகமும் திரு. எஸ். தங்கராசாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பயங்கர லொறிவிபத்து:

சென்னை, ஆக 11

விழுப்புரத்தில் நடைபெற்ற லொறி விபத்து ஒன்றில் குழந்தைகள் உட்பட 12 பேர் மரணமாகினர்.

சிலர் ஸ்தலத்திலும் ஏனையோர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டும் இறந்தன. (உ)

## மீண்டும் மூப்பனர் தெரிவு

சென்னை, ஆக.10

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவராக திரு. கருப்பையா மூப்பனர் மீண்டும் இன்று தெரிவு செய்யப்பட்டார்.

கமிட்டியின் மொத்த உறுப்பினர்கள் தொகை 611, இவர்களில் 545 பேர் கலந்து கொண்டர்.

நல்லை உற்சவம்:

## ஐஸ்கிறீம் கடைகளுக்கு கோவில் வீதிகளில் தடை!

யாழ்ப்பாணம், வியாழன்

"நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைச் சுற்றிய வீதிகளில் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் தற்காலிக கடைகள் எதுவும் நிறுவ அனுமதி வழங்கப்படமாட்டாது".

யாழ் மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர்க் கந்தசாமிகோவில் வருடாந்த உற்சவம் தொடர்பாக, நடந்த மாநாட்டில், திரு கே. சிவஞானம் மேலும் கூறியதாவது: தண்ணீர்பந்தல் அமைப்போர், முன் அனுமதி பெறவேண்டும். தண்ணீர்ப் பந்தல் அமைக்கும் போது, வீதிக்குக்குறுக்கே எவ்வித விளம்பரங்களும் இடம் பெறக்கூடாது.

'கோவில் வீதிகளில், ஐஸ்கிறீம் கடைகளோ, வேறு கடைகளோ, அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. வீதிகளில் தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்குள் ஐஸ்கிறிம் விற்க அனுமதிக்கப்படமாட்டாது. சந்தையில்மட்டும் ஐஸ்கிறிம் விற்க அனுமதிக்கப்படும். [க-அ]

## உத்தரபிரதேசத்தில் வெள்ளம்: 18 லட்சம் பேர் பாதிப்பு!

லக்னோ. ஆக. 10

உத்தரப்பிரதேஷில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தினால் 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டபின் மாநில முதலமைச்சர் திரு. யாதவ் இத்தகவலை வெளியிட்டார்.

புதுடில்லியில் ஹரியானா, ராஜஸ்தான், உ. பி. முதலமைச்சர்கள் மாநாடு நடைபெறவிருப்பதாகவும் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இம்மாநாட்டைக் கூட்டியுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ள அபாயம் அடிக்கடி ஏற்படுவதால் இதற்கு நிரந்தர தீர்வு காணவே பிரதமர் இம்மகாநாட்டைச் கூட்டியுள்ளாரென்றும் அவர் தெரிவித்தார். (உ)

## வடபகுதிக் கூட்டுறவாளர் புதிய கழகம் அமைத்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

**கூட்டுறவு இயக்கத்திற்குரிய ஜனநாயகக் கொள்கையை நிலைநாட்டி, மக்களின் இயக்கமாகப் பேணும் நோக்கமாக வடபகுதிக் கூட்டுறவாளர்கள் சேர்ந்து 'பிரதேசக் கூட்டுறவாளர் கழகம்' என்ற பெயரில் புதிய இயக்கமொன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.**

**கூட்டுறவுத்துறை புனரமைப்புத் தொடர்பாகக் கூட்டுறவு அமைச்சருக்கு மகஜர் ரூபத்தில் ஆலோசனை வழங்குவதற்காக 7 பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.**

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் முன்னாள் வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபைச் செயலாளர் திரு. கந்தையா தலைமையில் நடந்த கூட்டுறவாளர் ஆலோசனைக் கூட்டத்திலேயே புதிய கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

திரு. சு. கந்தையா (தலைவர்) திரு. வி. பொன்னம்பலம் (செயலாளர்), திரு. கு. நேசையா, திரு. கே. எஸ். பொன்னுத்துரை, திரு. க. சி. குமாரசாமி, திரு. வி. மகேந்திரன், திரு.பி. கணபதிப்பிள்ளை ஆகிய 7 பேர் குழுவில் தெரிவு செய்யப்பட்டனா.

இக் கூட்டத்தில் கூட்டுறவாளர் தெரிவித்த ஆலோசனைகள், மகஜர் வடிவில் கூட்டுறவு அமைச்சரிடம் சமர்ப்பிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

**அரசாங்க இயக்கம்**

தலைவர் திரு க. கந்தையா பேசுகையில் கூறியதாவது: 'சென்ற சில ஆண்டுகளாகக் கூட்டுறவு இயக்கம், அரசாங்கத்தின் இயக்கமாக இயங்கி வந்தது. இதனாலேயே கூட்டுறவு இயக்கமே இல்லை என்ற நிலைமைக்கு வந்துள்ளது.

**வடக்கில் அனுபவசாலிகள்**

வடக்கில் கூட்டுறவுத்துறையில் சிறந்த அனுபவசாலிகள் அறிவாளிகள் ஏராளமாக இருகிறார்கள். இவர்களை ஒன்று கூட்டிக் கூட்டுறவு இயக்கம் எமது பிரதேசத்தில் மீண்டும் சிறப்பாக இயங்க வழிவகுக்க வேண்டும்.

திரு. ஆர். ஈ. குமாரசாமி

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

கடவுளைச் சாட்சியாய் வைத்துக்கொண்டு எண்ணியும் பேசியும், செயலாற்றியும் வருபவன் சரியானதைச் செய் வதற்கு அஞ்சான்.

—மகாத்மாகாந்தி.

ஈழநாடு
THE EELANAADU

# தமிழ்நாடு முதல்வரின் புதிய திட்டம்

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பும் இந்திய இனத்தவர்களின் புனர்வாழ்வுக்கென புதியதிட்டம் ஒன்றை செயல்படுத்தப்போவதாக தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் மலையக தலைநகரான கண்டியில் பிறந்தவரான திரு. இராமச்சந்திரன் இங்கிருந்து குடிபெயர்ந்து தமிழகம் செல்லும் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டிருப்பது ஆச்சரியமல்ல.

இந்திய அரசின் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் திரும்பிச்செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் தாயகம் திரும்பியபின் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க நேர்வதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

கப்பலில் ஏறி அக்கரை சேர்ந்ததும், ஏற்கனவே அங்கு தொடர்புகள் உள்ளவர்கள் தம் இனத்தவர்களோடு சேர்ந்துகொள்ள முடிகிறது. ஆனால் அங்கு எதுவிதத் தொடர்புமே இல்லாதிருந்து புதிதாகச் செல்பவர்கள் அந்த அரசு எங்கு குடியமர்த்துகிறதோ அங்கேதான் தம் வாழ்க்கையைஅமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. முகாம்களில் பலநாட்கள் குடும்பங்களுடன் தங்கியிருந்து அவதியுறுவதுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு இடங்களில் குடியமர நேர்கிறது. சிலவேளைகளில் ஒரு குடும்பம் தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்டால் அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு பகுதி மைசூரில் குடியேற நேர்கிறதாம்.

இவ்வாறு வெகுதூர இடங்களில் குடியேறிய பிறகு இவர்களுக்கிடையில் குடும்பத் தொடர்புகள் இல்லாமல்போவது ஒருபுறமிருக்க குடும்பங்களில் ''நல்லது கெட்டது'' நிகழும்போது சந்தித்துக்கொள்வதற்கும் பங்குபற்றுவதற்கும் முடியாமல்போகிறது.

இது மனிதர்கள் சம்பந்தமான பிரச்னையாகவிருந்தும் இப்மாதிரியான பிரிவுத் துன்பங்கள் ஏற்படும் வகையில் இவர்கள் சம்பந்தமான புனர்வாழ்வுத் திட்டங்கள் அமுல்செய்யப்படுவது கவலைக்குரியது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புகிறவர்களில் பெரும்பாலானவர்கள்தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களின் குடும்பத் தொடர்புகள் அற்றுப் போகாத வகையில் தமிழ் நாட்டிலேயே குடியமர்த்தப் படுவதே வரவேற்கத்தக்கது.

பல ஆண்டுகள் இலங்கை தோட்டங்களில் வாழ்ந்து பழகிப்போன இவர்கள் முற்றிலும் புதிய சூழ்நிலையில்குடியமரும்போது கூடிய வரையில் அவர்களின் மனப் போக்குகளுக்கும், உடல் நிலைகளுக்கும் தொழில் அனுபவங்களுக்கும் இசைவான இடங்களை வழங்கி குடியமர்த்தப்பட வேண்டும் ஆனால் பெரும்பாலும் இப்படி நடைபெறவில்லை யென்றே தெரிகிறது.

பணவசதியும், தொழில் வசதியும் செய்துகொடுப்பது மாத்திரம் புனர்வாழ்வு ஆகிவிடாது.

இந்த நிலைமையை தமிழ் நாடு அரசு இப்பொழுது நன்கு உணர்ந்திருப்பதையே திரு. இராமச்சந்திரனின் புதிய கருத்து காட்டுகிறது.

மத்திய அரசின் போக்குக்கு இத்திட்டங்களை விட்டுவிடாமல் தமிழ்நாடு அரசு இதில் தார்மீகரீதியில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதனை தமிழ்நாட்டின் புதிய முதல் அமைச்சர்செய்வார் என்று எதிர்பார்ப்போம்.

## ''80 ஆயிரம் வள்ளுவகுல மக்களை கவனிப்பார் யாருமில்லை''

### திருவள்ளுவர் மகாசபைச் செயலாளர் கவலை

யாழ்ப்பாணம், வியா.

'இந்நாட்டில்வாழும் எண்பதினாயிரம் வள்ளுவகுலமக்கள் கல்வி, பொருளாதார, வேலை வாய்ப்பு, சமுதாய அந்தஸ்து ஆகியவற்றில் மிகப்பின்தங்கிய நிலையில் இலங்கையின் பல பாகங்களிலும் செறிந்து வாழுகின்றனர். இவர்களின் நலனில் எந்தவொரு அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சியோ அக்கறை செலுத்தாதது மிக வேதனைக்குரியது' என, அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் கல்விச் சகாய நிதிக்காக நடைபெற்ற நாடகவிழாவில்சபைப்பொதுச் செயலாளர் திரு. ச. தில்லைநாதன் இவ்வாறு கூறினார்.

இவ்விழா உடுவில் திறந்த வெளியரங்கில்திரு க கிருஷ்ணராசா தலைமையில நடைபெற்றது. திரு. ச. தில்லைநாதன் தொடர்ந்து பேசுகையில் '1972-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திருவள்ளுவர் சகாய நிதிமூலம்பிரதிவருடமும் ஐந்து வெறிய வள்ளுவ சமூக மாணவர் கா இலங்கையின் பல பாகங்களிலும் உதவிபெற்று உயர்கல்வி. வாய்ப்பைப் பெறுகின்றனர். இவர்கள் வேலைவாய்ப்பைப் பெறும்வரையில் மகாசபை மேலும் கவனமெடுத்துவருகின்றது. நந்நோக்கோடு இயங்கும் இச்சபையின் சகாயநிதிக்கு பொருள்வளம் நிறைந்தவர்கள் தாராளமாகப் பொருளுதவிசெய்யவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு சி குமாரசாமிபேசுகையில், மனிதவர்க்கத்தில் பீரிவினை கிடையாது. எந்தவொரு தனிமனிதனும் சுயமாக, தன் மூளையின் பரிணும வளர்ச்சியினுல் அவன் பின்தங்கிய நிலையில் இருந்து முன்னேறவேண்டும். 1956-ம் ஆண்டுக்குப் பின் சமுதாயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினுல் இவர்களது வாழ்வு வளம்பெற்றிருக்கின்றது சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு அரசாங்கம் பல துறைகளிலும் உதவிபுரிந்த ல் சமூகம் முன்னேற வாய்ப்புண்டு. இதற்கு என்னாலான உதவிகளைச் செய்வேனென உறுதியளிக்கிறேன்' என்றார்.

விழாவில் சமாதான நீதிபதியாகப் பதவிபெற்ற திரு எஸ் அருச்சுனன் கௌரவிக்கப்பட்டார். நாடகப்போட்டியில் 'வாழ்வு எங்கே', 'சகோதர விரோதி', 'அரிச்சந்திர மயான காண்டம்' பரிசிலைப் பெற்றன. (கெ-அ)

# 'பதுக்கல்காரர்தான் புதிய அரசுக்கு அஞ்சுவார்கள்''

### —நீர்ப்பாசன அமைச்சர்

கொழும்பு, புதன்

''ஐக்கிய தேசியக் கட்சி அரசு மக்கள் அரசு. இந்த அரசைக்கண்டு மக்கள் அஞ்ச வேண்டியதில்லை. பதுக்கல் காரர்கள்தான் அஞ்சவேண்டும்'' என்று நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு.காமினி திஸநாயக்கா கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது: ''நீதியான சமுதாயம் ஒன்றினை ஏற்படுத்தி மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைப்பதே புதிய அரசின் கொள்கையாகும் வரவேற்பு வைபவங்களில் கலந்து கொள்வதிலோ, பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலோ நாம் காலத்தை வீணாக்கப் போவதில்லை.

இந்த அரசமக்கள் அரசான படியால் அச்சத்திற்கு இடமில்லை.''

கிராமப்புற மின்சார விநியோகத்திற்காக அரசு ஒரு கோடிரூபாவை செலவிடும் என்றும் அமைச்சர் இக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். (உ)

## சுப்பிரமணியம் பூங்காவில் பி. எஸ். உருவச்சிலை

யாழ்ப்பாணம், வியா.

டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியத்தின் உருவச்சிலையை யாழ். சுப்பிரமணிய பூங்காவில் நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக, யாழ் மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இச்சிலையை வைப்பதற்கு யாழ். வைத்தியர் சங்கத்தினர் அனுமதி கோரியிருந்தனர். (க-ஆ)

## பனங்காமத்தில் ஆடி அமாவாசை விழா

மன்னார், புதன்

பனங்காமம் சிவன் கோவிலில் ஆடி அமாவாசை விழா வினையொட்டி இரு நாடகங்கள் எதிர்வரும் சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளன.

17 ம் நூற்றுண்டில் ஆட்சி செய்து, பனங்காமம் சிவன் கோவிலை நிறுவி, சைவம் வளர்த்த பனங்காம மாமன்னன் கயிலை வன்னியனது வீர வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, எழுதப் பெற்ற ''தணியாத தாகம்'' என்னும் நாடகமும், 'திருப்பம்' ஆகிய நாடகமும் விழாவில் இடம் பெறும்.

விழாவை பாண்டியன்குள உதவி அரசாங்க அதிபர் திரு. குலேந்திரா குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார் நாடக ஆசிரியர் திரு. கரவைக்கிழார் சிறப்புரையாற்றுவார். ஞாயிற்றுக்கிழமை பறங்கியாற்றில் தீர்த்த உற்சவம் நிகழும். [கெ-அ]

## அரசாங்க சில்லறைக் கடைகள்

கொழும்பு, புதன்

'கூட்டுறவு என்ற பெயர் இன்று நாட்டில் உதவாத பெயராகி விட்டது. விற்பனை நிலையங்கள் அரசாங்க சில்லறைக் கடைகள் என்ற புதிய பெயரில் இனிமேல் இது இயங்கும்''

நிதி அமைச்சர் திரு. ரோனி டீ மெல், அமைச்சில் நடந்த மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

நிதி அமைச்சர் மேலும் கூறியதாவது: 'கூட்டுறவு முறை முற்றாக மாற்றியமைக்கப்படும். நாட்டில் இன்று கூட்டுறவு இயக்கம் என்பது இல்லை. அதனைப் புனரமைப்புச் செய்வதில் பயனில்லை. கூட்டுறவு இயக்கம் நிலைபெறுது நியாயமான முறையிலும், விரைவாகவும், பொருட்களை வழங்குவதற்குப் புதிய திட்டமொன்று உருவாக்கப் படவிருக்கிறது.

'புதிய அரசாங்க சில்லறை கடைகள் 500 அரிசிப் பங்கீட்டு புத்தகங்கள் கொண்டதாக இருக்கும். அதே சமயம் தனிப்பட்ட வியாபாரிகளும், பங்கீட்டுப் பொருட்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படும்' (க-அ)

## செயல்திட்டப் பயிற்சியில் 'ஈழநாடு'

யாழ்ப்பாணம், வியா

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்களின் கற்பித்தல் பயிற்சியின் போது ''உள்நாட்டு தகவல் தொடர்புகள்'' என்ற தலைப்பின்கீழ் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் செய்திப்பத்திரிகையான 'ஈழநாடு' நாளிதழ் பற்றிய செயல் திட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தனர். அதற்கமைய, பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலை 7-ம் வகுப்பு மாணவிகளை அழைத்து வந்து 'ஈழநாடு' செய்திப்பத்திரிகை தயாராகும்விதம் பற்றிய தகவல்களை சேகரித்துச் சென்றனர். (கெ-இ)

## சுயாட்சிக் கழக மாநாடு

வண்ணார்பண்ணை, புதன்

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பத்தாவது ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டமும் மகாநாடும் அடுத்தமாதம் நடைபெறவிருக்கிறது மூன்று தினங்கள் இம்மகாநாடு நடைபெறவிருப்பதாகவும் இறுதி நாளன்று யாழ். முற்ற வெளியில் பொதுக்கூட்டமும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கழக உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இம்மகாநாடு பற்றிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கும் குழுக்கள் அமைப்பதற்கும் விசேஷ கமிட்டி ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 14ம்தேதி கூடவிருக்கும் தமிழர் சுயாட்சிக்கழக செயற்குழுவில் இவ்விஷயங்கள் ஆராயப்படவிருக்கின்றன. (அ)

## சிரமதான முறையில் புதிய விவசாய வீதி

சித்தன்கேணி, புதன்

விவசாயிகளின் நன்மைகருதி வட்டுக்கோட்டை அரசடியிலிருந்து வயலின் ஊடாக கொட்டைக்காடு, நொச்சிக்காடு பிள்ளையார் கோவிலடிவரை புதியவீதியொன்று சிரமதான முறையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வீதி அமைக்கும் பணிகளை அவ்வூர்மக்கள் சிரமதான முறையில் செய்துவருகின்றனர்.

சுமார் 50 விவசாயிகளுடன் 20 வண்டிகளும் இரண்டு உழவு இயந்திரங்களும் இவ் வேலையில் ஈடுபட்டுள்ளன.

வட்டு எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, முன்னாள் ஊர் மன்றத்தலைவர் திரு நா.அமிர்தலிங்கம், சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணாசலம் ஆகியோர் இச் சிரமதானப் பணிகளுக்குஉதவ முன்வந்துள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளாக இவ்வீதியை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது நிறைவேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அரிசி மா சீனி கையிருப்பு அரசு ஆராய்கிறது

கொழும்பு, புதன்

நாட்டின் உணவு சேமிப்பு கையிருப்பு ஆகியனபற்றி ஆராய விசேட குழுஒன்றை உணவுக் கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் நியமித்துள்ளார்.

அரிசிக் களஞ்சியங்களில் உள்ள அரிசி, மா, சீனி ஆகியவற்றின் கையிருப்பு, இவற்றின் விநியோகம் ஆகியன பற்றி இக்குழு ஆராயும்.

அரிசி, மா, சீனி ஆகியவற்றைச் சுத்திகரித்தல் ஆகியனபற்றி விசாரணைசெய்யும்படியும் அமைச்சர் இக்குழுவிடம் பணித்துள்ளார்.

திரு. பி ஏ சில்வா தலைமையிலான இக்குழுவில் திரு. சி. வி. உனம்புவ, திரு. வி. பி. சில்வா, திரு. பி. இரத்தினசிங்கம், திரு வெஸ்லி எக்கநாயக்கா ஆகியோருடன் நெல் சந்தைப்படுத்தும் சபையைச் சேர்ந்த ஊழியர் ஒருவரும் அங்கம் வகிப்பர்.

மூன்றுமாத காலத்திற்குள் விசாரணைகளை முடித்து தன்னிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படியும் அமைச்சர் இக்குழுவிடம் பணித்துள்ளார்.



# "இந்திராவை காங்கிரஸிலிருந்து வெளியேற்றுவதா? அந்தப் பேச்சுக்கே இடமில்லை"

## ஜெயப்பிரகாஷர் கருத்துக்கு சவான் மறுப்பு

சென்னை, ஆக. 10

**முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று லோகசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் தெரிவித்துள்ளார்.**

புதுடில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே திரு. சவான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ்கட்சி உயிர்பிழைத்து மதிப்புள்ள எதிர்க்கட்சியாக இருக்கவேண்டுமானால் திருமதி. இந்திரா காந்தியை இந்திய காங்கிரஸிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண் தெரிவித்திருந்தார்.

ஜெயப்பிரகாஷரின் இக்கருத்துப்பற்றிய பத்திரிகையாளரின் கேள்விக்குப்பதிலளிக்கையிலேயே திரு. சவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ஜெயப்பிரகாஷர்மீது தமக்கு முழுமதிப்பு உண்டென்றும் அதற்காக காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்தக்கூடிய எதுவித செயலையும் தாம் செய்யப்போவதில்லை என்றும் திரு. சவான் தெரிவித்தார். [இ]



### எம். ஜி. ஆர். அரசுடன் சுமுக உறவு

சென்னை, ஆக 10

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுடன் தமக்கு சுமுக உறவு நிலவுவதாக தமிழ் நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார். (உ)

"தமிழ்நாடு முதல்வர்

## 'ராஜாதேசிங்'காக நடித்தவர்; அவரிடம் மக்கள் ஏமாந்தனர்"

-இளம்பரிதி

சென்னை, ஆகஸ்ட் 10

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தம்மை ஏழை பங்காளன் மக்கள் தொண்டன், கொடை வள்ளல் என்று நம்பிய மக்களை ஏமாற்றிவிட்டார். இதை சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட அவரது நிதிநிலை (பட்ஜட்) அறிக்கை காட்டிவிட்டது.

இவ்வாறு தமிழ்நாடுசட்டசபை மேலவை உறுப்பினர் திரு. இளம்பரிதி கூறினார்.

திரு. எம். ஜி ஆரின் பட்ஜட் பற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"ராஜாதேசிங்காக திரைப் படத்தில் நடித்தவர் எம். ஜி ஆர். அவரது ஆட்சியும் பஞ்சகல்யாணி குதிரையைப் போல் இருக்கும் என நம்பி மக்கள் ஏமாந்துவிட்டனர். அவரது நிதி அறிக்கை பஞ்சகல்யாணி குதிரையைப் போலல்லாமல் ஜட்கா வண்டியில் பூட்டும் குதிரையைப்போன்றிருக்கிறது லாடம் இல்லாத குதிரையைப் போன்ற இவ்வரசு நீண்ட பயணத்துக்குத் தாக்குப்பிடிக்குமா என்பது சந்தேகம்தான்." (கெ-உ)

## 10 ஆயிரம் வயது மிருக உடல்!

லெனின்கிராட், ஆக. 10

ஏறத்தாழ 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தது எனக் கருதப்படும் ½ ஆண்டு வயதுள்ள இராட்சத மிருகத்தின் உடல் கெடாத நிலையில் சைபீரிய உறைபனிப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஒரு லிட்டர் நீளமும், 100 கிலோகிராம்எடையுமுள்ள இந்தக்குட்டி இராட்சத மிருகத்தின் தலை, முண்டம், கால்கள், தோல் முதலானவை கெட்டுப்போகாமல் அப்படியே உள்ளன. இதைக் கண்டுபிடித்த உயிரியலாளர்கள் அறிவித்துள்ளனர். இதற்குக் காரணம் உறைபனியிலும் இந்த மிருகத்தின் சடலம்புதைந்திருந்ததே என இவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

உயிரியலாளர் குழுவின் தலைவரான பேராசிரியர் நிக்கொலாய் வெறெஸ்சாஜின் இந்தமிருகத்தை ஆராய்வதற்கென விசேஷ நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்படுமென்றும், வரலாற்றுக்கு முந்திய காலத்தைய மிருகத்தின உடலொன்றை ஆராய நவீன விஞ்ஞானிகளுக்கு முதல் தடவையாகச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆராய்வு முடிந்த பின்னர், பெறுபேறுகள்இதர நாடுகளின் சகவிஞ்ஞானிகளுக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

மத்திய கிழக்குப் பிரச்னை:

## ஜெனீவா மாநாடுகூடுவதில் மீண்டும் முட்டுக்கட்டை

லண்டன், ஆக. 10

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான ஜெனீவா சமாதான மாநாட்டைக்கூட்டுவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தமது நிபந்தனைகளை வலியுறுத்தியதனையடுத்து இந்த முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலும், அமெரிக்காவும் ஏற்கமறுக்கும் நிபந்தனைகளை பலஸ்தீன விடுதலை இயக்கம் விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டாலும் பலஸ்தீனவிடுதலை இயக்கத்தின் நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் இணங்கமுடியாது இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மோஸே தயான் தெரிவித்துள்ளார்.

### ஜெருசலத்தில் வான்ஸ்

இதேவேளை ம. கி. பிரச்னை சம்பந்தமான சமரஸ முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் தற்போது ஜெருசலம் சென்றுள்ளார். (உ)

## மனித சிந்தனையைமாற்றும் சோதனையில் 149 பேர் பலி!

வாஷிங்டன், ஆக. 10

"மனிதனின் சிந்தனையையும், நடத்தையையும் மாற்றியமைப்பதற்கான பயங்கர பரிசோதனைகளை 1953 1964 காலகட்டத்தில் சி. ஐ. ஏ. உளவு ஸ்தாபனம் மேற்கொண்டது. 'எம். கே. - அல்ட்ரா' என்ற இந்தப் பரிசோதனைகளின்போது 149 பேர் பலி ஆடுகளாகப் பயன்படுத்தப் பட்டனர்" என சி. ஐ. ஏ; இயக்குநர் அட்மிரல்டேர்னர் அமெரிக்க செனட் கமிட்டிக் கூட்டம் ஒன்றில்சாட்சியமளிக்கையில் ஒப்புக்கொண்டார்.

மொத்தம் 154 கல்லூரிகளில் பல்கலைக்கழகங்கள், ஆஸ்பத்திரிகள், சிறைச்சாலைகள் ஆகியவற்றில் இப்பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. இப்பரிசோதனைகளை நடாத்துவதற்கென சி. ஐ. ஏ. 185 விஞ்ஞானிகளின் உதவியைப் பெற்றது. போதை வஸ்துக்கள், மதுபானங்கள், பல்வேறு இரசாயனப்பொருள்கள், தூக்க மாத்திரைகள், மின்சார அதிர்ச்சி முதலானவை இப்பரிசோதனைகளின் போது பயன்படுத்தப்பட்டன மனிதர்களின் மனப்போக்கினை வேண்டிய மார்க்கத்தில் திருப்பும் இம்முயற்சியில் பல்வேறு மனோவசிய முறைகளும் பயன்படுத்தப்பட்டன என டேர்னர் மேலும் விபரம் தெரிவித்தார். (உ)

## "தி. மு. க. அமைச்சரவையில் கல்தா கிடைத்தது ஏன்?"

### சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, ஆக. 10

"ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு துறைகளுக்கு மாற்றக்கூடாது. இதை சில அதிகாரிகள் மீறினார்கள். இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கூறிய எனக்கு, முதலமைச்சர் ஊடாக பதவி நீக்க அறிவித்தல் வந்தது"

இவ்வாறு முன்னாள் தி. மு. க. அமைச்சரும், தமிழ் நாடு சட்ட மேலவை உறுப்பினருமான திருமதி சத்தியவாணி முத்து கூறினார்.

இதற்கு மேலவையில் பதிலளித்த திரு ஆற்காடு வீராசாமி (தி. மு. க), "அரசின் இரகசியங்களைக் காப்பதாக உறுதி எடுத்த அமைச்சர் ஒருவர் அதை மீறுவது முறையாகாது. எனவே இவ்வரம்பு மீறலையொட்டியே நீங்கள் விலக்கப்பட்டீர்கள் என்று கூற விரும்புகிறேன்" என்று திருமதி முத்துவுக்கு கூறினார். (கெ-உ)

## பொருட்களின் விலைகளை குறைக்காவிடின்தேசியமயம்

### வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 10

"இன்று நாட்டில் தனியார் துறையைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் தமக்கிசைவான விதத்தில் பொருட்களின் விலைகளைக் கூட்டி கொள்ளை லாபம் அடித்து வருகின்றனர். இது கண்டிக்கத்தக்க செயலாகும் மக்களின் நலன்களுக்கு இசைய பொருட்களின் விலைகளைக் குறைக்க தனியார் நிறுவனங்கள் தவறும் பட்சத்தில் தனியார் வர்த்தகம் முழுவதையும் எமது அரசு தேசியமயமாக்கியே தீரும்" என இந்திய

(6ம் பக்கம் பார்க்க)

## சீனாவின் அணுசக்தி நஞ்சு யு.எஸ்ஸில் 100 சிசுக்கள்பலி

### நியூயோர்க் போஸ்ட் தகவல்

வாஷிங்டன், ஆக. 10

சென்ற அக்டோபர் மாதத்தில் சீனா வாயு மண்டலத்தில் நடத்திய அணு ஆயுத சோதனையிலிருந்து வெளிப்பட்ட கதிரியக்க நச்சுத்தன்மையின் நேரடி விளைவாக அமெரிக்காவின் வடகிழக்கு மாநிலங்களில் புதிதாகப் பிறந்த 100 க்கு அதிகமான குழந்தைகள் இறந்துவிட்டதாக "நியூயார்க் போஸ்ட்" பத்திரிகை அறிவிக்கிறது. இதை நிரூபிப்பதற்கு பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஈ. ஸ்டென்கிளாஸ் தொகுத்துள்ள புள்ளி விபரங்களை அது எடுத்துக்காட்டியுள்ளது.

கதிர் இயக்க நஞ்சு உள்ள பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கு ஃப்ளு, நிமோனியா, வயிற்றுக்கோளாறுகள் முதலிய நோய்களை எதிர்க்கும் சக்தி குறைவாக இருப்பதாக ஸ்டென்கிளாஸ் கூறுகிறார். இந்தக் குழந்தைகளின் மரணத்திற்கு நேரடியான காரணம், சீனாவில் வெடிக்கப்பட்ட அணு ஆயுதம்தான் என்று அவர் கருதுவதாக "நியூயார்க் போஸ்ட்" எழுதியுள்ளது. [உ]

## லட்சுமி, சுசீலா, ஜேசுதாஸ்: மத்திய அரசு விருது!

சென்னை, ஆக 9

கடந்த ஆண்டு இந்தியாவின் சிறந்த நடிகையாக லட்சுமி மத்திய அரசினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

"சில நேரங்களில் சில மனிதர்கள்" என்ற படத்தை சிறந்த முறையில் நடித்தமைக்காக லட்சுமி சிறந்த நடிகையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த பாடகராக ஜேசுதாஸும், சிறந்த பாடகியாக சுசீலாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட குழுவின் இம்முடிவை தகவல ஒலிபரப்பு அமைச்சர் திரு எல். கே. அட்வாணி தெரிவித்தார். (கு-இ)

கப்பல் — விமானத்துறை

# கூட்டுத்தாபனங்களுக்கு புதிய தலைவர்கள்

கொழும்பு, புதன்

கப்பல், விமானப் போக்குவரத்து உல்லாசத்துறை அமைச்சின்கீழ் இயங்கும் சகல கூட்டுத்தாபனங்களுக்கும் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

துறைமுக சரக்குக்கூட்டுத்தாபனத் தலைவராக திரு பி. ஆர், ராஜபக்ச நியமனம் பெற்றுள்ளார்.

உல்லாசப் பயணச் சபைத் தலைவராக திரு. சந்திரா டீ. சொய்சாவும், ஏயர்சிலோன் நிறுவனத்தின் தலைவராக திரு. ஜி. எஸ் பீரிஸும் துறைமுக ரலிபாதுகாப்புக் கூட்டுத்தாபனத் தலைவராக திரு. தர்மதேவ ஜெயசிங்காவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-இ)

# ரூ 10 லட்சம் பெறுமதியான விவசாய இயந்திரங்கள்

## இலங்கைக்கு இந்தியா அன்பளிப்பு

கொழும்பு. புதன்

விவசாய நடவடிக்கைகளுக்கு உதவும்பொருட்டு குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்குரிய இரு இயந்திரங்களை பாரதம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இந்த இயந்திரங்கள் பத்துலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தவை.

இந்த இயந்திரங்களை இலங்கையில் உள்ள பாரததூதுவர் திரு. குல்சன் நீர்ப்பாசன அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்காவிடம் நாளை கையளிப்பார். (உ)

# மேலும் 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்

கொழும்பு. புதன்

தற்போது சேவையில் ஈடுபட்டுவரும் 4 ஆயிரம் இ. போ. ச. பஸ்களுடன் மேலும் 500 புதிய பஸ்கள் இவ்வருட முடிவுக்குள் சேவையில் ஈடுபடுத்தப்படும்,

இத்தகவலை இ. போ. ச. தலைவர் திரு. ஏ. ஆர். பி. விஜயசேகரா தெரிவித்தார்.

பொதுமக்களுக்குசிறந்த பஸ் சேவையை அளிப்பதற்கு மொத்தம் 5,400 பஸ்கள் தேவை என்றும் தெரிவித்த அவர், தற்போது பஸ் டிப்போக்களில் இயங்காது முடங்கிக்கிடக்கும் பஸ்களை உள்ளூரில் தயாரிக்கப்படும் உதிரிப்பாகங்களைக்கொண்டு திருத்தி சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# மொழிவழிச்சங்கத்துடன் இணைய வேண்டும்!

## திருமலை உ. எ. சங்கம் தீர்மானம்

திருகோணமலை, புதன்

உள்ளூராட்சிஎழுதுவினைஞர் சங்கம் மொழிவழித் தொழிற்சங்கத்தின் ஓர் அங்கமாக இணையவேண்டும் என்ற தீர்மானம் திருமலையில் நடைபெற்ற உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் மாநகரசபை ஆணையாளர்களை நியமித்து விசேட ஆணையாளர்கள் பதவிகளை ரத்துச்செய்தமைக்காக உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸாவைப் பாராட்டும்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (கி-உ)

# "ஒழுக்கம் சகிப்புத்தன்மையை அளிப்பதுவிளையாட்டுப் போட்டி"

யாழ்ப்பாணம், வியா.

"சிறந்த ஒழுக்கத்தையும், சகிப்புத் தன்மையையும் நமக்களிப்பது விளையாட்டுப்போட்டிகளே" என்று செங்குந்தா இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டுரை யாற்றிய நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

"இன்றுஇந்தவட்டாரக்கல்வியதிகாரியாக நான் உயர்ந்துள்ளமைக்கு இக்கல்லூரியே பெரும்பணியாற்றியதென்பதை என்னால் மறக்கமுடியாது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு என்னாலான பணியினையென்றும் செய்வேன்.

"இந்தக் கல்லூரிபல சிறந்த மாணவர்களை, சட்டவல்லுநர்களை, அரசாங்க அதிகாரிகளை, வைத்தியர்களை இவ்வாறு சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள பலரை உருவாக்கித் தந்துள்ளது. இன்று இக்கல்லூரிக்கு தலைமை வகிப்பவர் மிகச் சிறந்த கல்விமான் எனவே இவரது சிறந்த பணிமூலம் இக்கல்லூரி இங்குள்ள பிரபல கல்லூரிகளில் ஒன்றாக சிறப்புறும். விளையாட்டுத்துறையில் எவ்வாறு மாணவர்கள் முன்னேறுகிறீர்களோ, அதேபோன்று சகலதுறைகளிலும் நீங்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும். படிப்பிற்கும், விளையாட்டிற்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவதே புதிய கல்வித்திட்டம். அதனால்தான் சகல பாடசாலைகளிலும் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொருவருக்கும் தலைமை தாங்குகின்ற பண்பை, கீழ்ப்படிவை, ஒழுக்கநெறியைக் கைக்கொள்ள இத்தகையவிளையாட்டுப் போட்டிகளே வழிவகுக்கும். இவற்றில் வெற்றிதோல்வி என்ற பேதங்களான வேற்றுமைகளை மறந்து அனைவரையும் ஒன்றுபடுத்தி நடாத்த வேண்டும். விளையாட்டுக்குழுச் செயலாளர் திரு. பரமேஸ்வரன் நன்றி தெரிவித்துப்பேசினார். (கா-உ)

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

இலங்கைக்குடியரசின் நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில் காலஞ்சென்ற சிங்கப்பூர் 15 25, சிக்லாப் றயிஸ்,சிசில் செல்வதுரைராசா சின்னத்துரை பெண் எலிசபெத் டொறதியா தங்கமலர் என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துச் சம்பந்தப்பட்ட விடயம்.

வலயம்: யாழ்ப்பாணம்.

இல: 366,

சிங்கப்பூர் 15, 25 சிக்லாப் றயிஸ்,சேர்ந்த சிசில் செல்வதுரைராசா சின்னத்துரை கொழும்பு-3, கொள்ளுப்பிட்டி 556/2, காலிவீதி யேம்ஸ்வன்னித்தம்பி தத்துவக்காரர் மூலம்

மனுதார்

1. இஷானி எஸ்தர் தங்கராணி
2. டிலினி செல்வஜோதி எலிசபெத்
   இருவரும் 25 சிக்லாப் றயிஸ் சிங்கப்பூர்.
3. பராயமற்ற 1-ம் 2-ம் எதிர்மனுதாரின் பாதுகாவலராக றெபற் குலசிங்கம் யேசுதாசன், 328, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்மனுதார்

281-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977 5-10 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததன் பேரில் 1977 ஆவணி 30ம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினாலன்றி மேற்சொல்லப்பட்ட மனுதார் காலஞ்சென்றவரின் கணவன் என்ற வகையில் காலஞ்சென்றவரின் மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத் தத்துவப் பத்திரங்களைப் பெறுவதற்கு உரித்துடையவரென்றும் அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுமென்றும் மேற்சொல்லப்பட்ட பராயமடையாத 1-ம் 2-ம் எதிர்மனுதார்களின் பாதுகாவலராக 3-ம் எதிர் மனுதார் நியமிக்கப்படுவாரென்றும் யாழ்ப்பாணம் நீதி நிருவாகவலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்குவழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி.

பீ.செ. இராசக்கோன்,
சட்டத்தரணி.
தயாரித்தவர்.

1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 10-ம் திகதி.

6812

—ஆச்சில்—

கணித விஞ்ஞான வாய்பாடுகள்

ஆக்கியோன்
வி. செல்வரத்தினம்

INTER E. E.
(City&Guild) Lond.
திருத்திய பதிப்பு

விரைவில் வெளிவரும்

தனலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்.

# "ரயில்வே பகுதி ஊழல்களை விசாரிக்க குழு நியமிக்கப்படும்"

கொழும்பு, புதன்

கடந்த ஆட்சிக் காலத்தில் ரயில்வேப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றி விசாரணை செய்வதற்காக மூவர் கொண்ட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

இக்கமிட்டியில் ரயில்வே வேலைத்தல பொறியியலாளர், சட்டத்தரணி, கணக்காளர் ஆகியோர் அங்கம் வகிப்பர் என்று போக்குவரத்து அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளையில் ரயில்களிலும் ரயில் நிலையங்களிலும் உள்ள சிற்றுண்டிச் சாலைகளை புனரமைப்புச் செய்யும்படி போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமட் உத்தரவிட்டுள்ளார்.

பொது மக்களுக்கு அதி சிறந்த ரயில் சேவையை விரைவில் அளிக்க முடியும் எனதாம் நம்புவதாகவும் இதற்காக ரயில் பெட்டிகள், என்ஜின்கள் ஆகியன விரைவில் திருத்தப்பட உள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இம்மாதம் 13-ம் திகதி திரு. முகமட் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து ரயில்வே திணைக்கள அபிவிருத்தி பற்றி கலந்துரையாடுவார். (ம-இ)

# வெளிநாட்டுத் தூதுவர் புதிய அரசுக்கு ஆதரவு

கொழும்பு, புதன்

இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகப் பொறுப்பாளர்கள் குழு ஒன்று நேற்று வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ ஸி. எஸ். ஹமீத்தைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்தது.

புதிய அரசுக்கு தாம் தொடர்ந்து உதவிகளை வழங்கத் தயாராக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

டொமினிக்கன் குடியரசு தூதுவர் தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது: (இ)

## உணவுற்பத்தி அதிகரிக்கும்

லண்டன், ஆக 10

1977-1978-ம் ஆண்டுகளில் உலக நாடுகள் தானிய உற்பத்தி 20 சத விகிதம் அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் உணவு விற்பனவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை மெற்படி ஸ்தாபனம் ரோமாபுரியில் நேற்று வெளியிட்டது. (உ)

## ராஜன் கதிர்காமர் நியமனம்

கொழும்பு, புதன்

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத் தலைவராக றியர் அட்மிரல் ராஜன் கதிர்காமர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய கப்பல்துறை அமைச்சர் திருமதி விமலா கன்னங்கராவின் உத்தரவைத் தொடர்ந்து முன்னாள் தலைவர் திரு. பி. வி. கரண்டாவல ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்தக்காலிஇடம் ஏற்பட்டது. (க-அ)

# தேவை

## பச்சிலைப்பள்ளி ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(1) கணக்குலிகிதர் தரம் 2

தகுதிகள்: ஜி. சி ஈ. (சாதாரணம்) அல்லது வர்த்தக கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி, அத்துடன் கூட்டுறவு வேலையாளர் தராதரப்பத்திரம் (சாதாரணம்) கணக்கியலில் திறமைச்சித்தி.

சம்பள விகிதம்: $\frac{180-304}{6\times 10-8\times 8}$

பிணை: ரொக்கம் ரூபா 1000/-

(2) எழுதுவினைஞர் தரம் 3

தகுதிகள்: ஜி. சி. ஈ. (சாதாரணம்) கணக்கியல் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்கள்.

சம்பளம்: $\frac{135-240}{5\times 12-7.50\times 6}$

பிணை: ரொக்கம் ரூபா 500/-

(3) கிளைமுகாமையாளர் தரம் 3

தகுதிகள்: ஜி. சி. ஈ. (சாதாரணம்) ஆறுபாடங்களில் சித்தியுடன் ஒருவருட அனுபவம்.

சம்பளம்: $\frac{180-320}{8\times 10-10\times 6}$

பிணை: ரொக்கம் ரூபா 1000/-
ஆதனம் ரூபா 2000/-

(4) லொறி கிளீனர்

தகுதி: எட்டாம் வகுப்பில் சித்தி
அநுபவம்: ஆகக் குறைந்தது இரண்டு வருட அநுபவம்.
சம்பளம்: நாளொன்றிற்கு ரூபா 7-50-ம் அதற்குரிய விசேட படிகளும். மேற்படி விண்ணப்பங்கள் தலைவர், பச்சிலைப்பள்ளி பல. நோ. கூ. சங்கம் பளை. என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் 20-8-77-க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை.

9 8-77.

6815

**REGAL** Daily: at 4-45, 7-00 & 9-30 p.m
(JAFFNA)

Behind on Door a desperate man Behind the Other a Vulnerable, lonely woman Between them a Ruthless youth.

BETTE DAVIS MICHAEL REDGRAVE in

## CONNECTING ROOMS

Color Adults only

---

கடைசிவாரம்

**ராஜா** 93-வது தினம்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7180

தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)

குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனம் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

---

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்

விஜயகுமார் — ஜெய்சித்ரா

## தாய் இல்லாக் குழந்தை

**லிடோ** போன்: 7695 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)

ஜெய்சங்கர் — சுஜாதா

## நீ ஒரு மகாராணி

---

**சாந்தி** ஃ சிவாஜி ஃ பத்மினி
யாழ். நகரி ஃ நாகையா ஃ தங்கவேலு
போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

## நான் வணங்கும் தெய்வம்

(புத்தம் புதிய பிரதி)

---

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்

எம். ஜி. ஆர்.-லதா · நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த

## உழைக்கும் கரங்கள்

(ஈஸ்ட்மன் கலர்)

---

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த

## பட்டணத்தில் பூதம்

(கறுப்பு - வெள்ளைப் புதிய பிரதி)

19-ந் திகதி முதல்

சிவகுமார் **அன்னக்கிளி** சுஜாதா

---

### விற்பனைக்கு

பெரிய அளவிலான காட்போட் பெட்டிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கணபதி ஸ்ரோர்ஸ், 18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 225. 6807

---

### நல்லூர்க்கந்தசுவாமி கோவில் உற்சவ ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல் - 1977

எதிர்வரும் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டுப் பின்வரும் ஒழுங்குகள் மிகவும் கண்டிப்பாகப் பின்பற்றப்படும் என்பதைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன்.

1. கோவிலை அண்மித்துத் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் தற்காலிககொட்டில், குடிசைகள் அமைக்க எவருக்கும் எக்காரணத்திற்காகவும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.
2. சகல விதமான புது வியாபாரங்கள் அனைத்தும் உற்சவத்தை ஒட்டி நிர்மாணிக்கப்பட இருக்கின்ற தற்காலிகச்சந்தையிலேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

முருகனது அடியார்களின் வசதிக்காகவும், நலனுக்காகவுமே மேற்படி ஒழுங்குகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. ஆகையினால் இவ்வொழுங்குகளுக்கு அமைந்து ஒழுகுமாறு அனைவரையும் வேண்டுகிறேன்.

க. சிவஞானம்
விசேட ஆணையாளரும்,
மாநகர ஆணையாளரும்.

யாழ்ப்பாணம்.
9-8-77 6820

---

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30

DALEKS INVASION EARTH

---

**நாகம்ஸ்**
(உன்னகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30

Five Crazy Boys

---

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
**பணத்தோட்டம்**

---

# வரி விளம்பரம்

### தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள கெல்ப்பர், பபுளர் (Helpers & Bubblers) தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். வேலை பழகுபவர்களும், பழக்கப்படுபவர்களும் உடனடியாகத் தேவை. உடனே நேரில் வரவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 6738

### கேள்வி விளம்பரம்

உரும்பராய் — ஊரெழு பட்டணசபை

உரும்பராய் பொதுச்சந்தை கட்டிட வேலை

மேற்படி வேலைக்குசீல்வைத்த கேள்விகள் என்னால் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி பகல் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப்பணமாகரூபா 25/-ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 200/-ம் செலுத்தி ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி பிற்பகல் 2 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது கந்தோரில்உள்ள கேள்விப் பெட்டியில் போடவேண்டும். பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணம் அவர் கட்கும் பதிவுத்தபாலில் ஓர் பிரதி அனுப்பப்படல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்கள் எனது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

த. சின்னத்துரை,
செயலாளர்,
பட்டனசபை
உரும்பராய் - ஊரெழு.
பட்டனசபை அலுவலகம்,
உரும்பராய் - ஊரெழு,
உரும்பராய். 8-8-77
6821

### வகுப்புகள்

சட்ட முதற்தேர்வு 1977, 1978 ஆங்கிலம் / தமிழ் 21-8-77ல் ஆரம்பமாகின்றது. அச்சிட்ட குறிப்புகள் வழங்கப்படும். நியூ யாழ். சட்ட நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். 6818

### மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்

வெற்றுச்சாக்கு விற்பனை

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச்சாக்குகள் (4200) விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கிப் பூரணப்படுத்தி 15-8-77க்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி:- பொதுமுகாமையாளர், மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய்.

பொதுமுகாமையாளர்

6819

### பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

பளை

இச்சங்கத்தில் 5000க்கு அதிகமான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குள்ளது. விபரங்களுக்கும் - கேள்விப்பத்திரங்களுக்கும் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். கேள்விப் பத்திர கட்டுப்பணம் ரூபா 100/- செலுத்த வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை.
9-8-77 6816

---

கடைசி வாரம் 98-வது நாள்

**ராணி** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

## நாளை நமதே

15ம் திகதி முதல் சிவாஜி-கே. ஆர். விஜயா

## ராமன் எத்தனை ராமனடி

(புதிய பிரதி)

---

**வின்ஸர்** இப்பொழுது நடைபெறுகிறது
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்



சிவாஜி, மஞ்சுளா,
கமலஹாசன், தேவிகா,
ஜெயசித்ரா,
எஸ். வி. சுப்பையா
நடித்த

## சத்யம்

டைரக்ஷன்: S. A. கண்ணன்
[ஈஸ்மன் கலர்]

[திரைக்கதை, வசனம்: வியட்நாம்வீடு சுந்தரம்]

---

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.

இன்று முதல்
விறுவிறுப்பான ஆரம்பம்

Grand Release
FROM TODAY

டோனி கேட்டிஸ்
ரோஜர் மூர்
நடித்த

புதிர்...
மர்மம்...
திகில்...
நகைச்சுவை...
அதிர்ச்சி...
பரபரப்பு...
நிறைந்த




## 'லண்டன் கொன்ஸ்பிரசி'

(இலண்டன் சதித்திட்டம்)

ஈழநாடு
The EELANADU

ரேட்டறிக்காணிவல்:

## காதல்கீதம்-- கவர்ச்சிநடனம் கண்கவர் ஹவாய்

நிலவானிலே மேகத்திரை விலக்கி மெல்லத் தவழ்ந்து வந்தாள்வெண்ணிலவுப் பெண்ணரசி. கோலமேடையிலே நாணத்திரை விலக்கி மெல்ல நடந்து வந்தாள் மண்ணுலகப் பெண்ணிலவு சந்திரிகா குமாரசிங்க.

பருவமார்பினிலே பாங்கான பூமாலை. சிறிய இடையினிலே சிரிக்கின்ற மலர்க்கூட்டம். சின்ன அடியெடுத்து சிங்கார நடை இட்டு மெல்லப்புன்னகைத்தாள் அழகுத் திருமகளாய். அவள் பின்னே அணி அணியாய் இளம் பெண்கள்- குலைத்துவிட்ட கூந்தலிலே ஒற்றை மலர்சூடி மெல்ல நடையிட்டார். மலைத்துவிட்ட ரசிகர்களை ஆடவைக்கும் இன்பஇசை மெதுவாக எழுந்தது. ஆம் ''புளுஹவாய்'' ஆரம்பமாகிவிட்டது.

### இசைக்கூட்டம்

சிறியகதிரைகளில் அமர்ந்திருந்த ஐந்து கன்னியர்கள் கையிலே மின்னுகின்ற கிற்ருர் வாத்தியக் கருவியுடன் இன்ப ஒலி எழுப்பினர். அவர்களுடன் நடுவில் வீற்றிருந்த ஆண் ஒருவரும் கிற்ருர் இசைக்கு மெருகூட்டினர்.

அவர்களுக்கு அருகினிலே நான்கைந்துஆண்கள் கையிலே இசைக்கருவிகளுடன் இசைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் பட்டிக்லுங்கியும் பருவத்தைக் காட்டுகின்ற கவர்ச்சிச்சட்டையும் அணிந்த மங்கையர்கள் மலர்ந்தமுகத்துடன் இசை வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தனர். எல்லோருடைய கழுத்திலும் உள்ள மலர்மாலைகள் மனதை மயக்கின.

### புளுஹவாய்

அலைமோதும் தென்திசை நாடான ஹவாய் நாட்டினிலே பால் நிலவு வேளையிலே பயின்றுவரும் இசைஇன்பம் சுழன்று எழத் தொடங்கிவிட்டது. ''புளுஹவாய்'' என்னும் ஆங்கில கீதம் காற்றிலே கலந்து காதிலே தேனுகப் பாய்ந்து கொண்டிருந்தது.

### ஹவாய் லாலாய்பாய்

தென்கடல்கரையிலே முழங்குகின்ற இசையிலே மயங்கி நின்ற மக்கள் முன் தென்கடல் கரையினுக்கு கவர்ச்சியூட்டும் ஹவாய் அழகிகள் தோன்றத் தொடங்கினர். பளபளக்கும் பல வண்ண நாடாக்கள் பலவற்றை நிலைக்குத்தாக அணிந்து- பழகுடி மக்களின் மரவுரி போன்ற ஆடையை இடையிலே கட்டிவந்தார்கள் கட்டழகுக் கன்னியர்கள். அவர்களுடைய பருவஎழிலை எடுத்துக்காட்டுவதுபோல் பட்டுத்தளிர் மேனியிலே கவர்ச்சிக்கச்சு ஒன்று கவ்விப் பிடித்துக் கொண்டிருந்தது இத்தனையும் போதாதென தங்கள் நிலவு முகத்துக்கு மேகத்திரை அமைப்பதுபோல் கார்நிறக் கூந்தலைக் கட்டவிழ்த்து கண்கவர் மலரொன்றைச் சூடி இருந்தார்கள்.

இந்தக் கன்னியர்கள் இசைக்கேற்ப தாளலயத்தோடு கைகளை அசைத்தும் கவர்ச்சிக் கட்டுடலை அசைத்தும் ஆடத் தொடங்கினர். முதலில் குமாரி சந்திரகா குமாரசிங்க, சிவப்பு நிற ஆடையுடன் ஹவாய் லாலாய்பாய் என்னும நிகழ்ச்சியை வழங்கினர். அவருடன் கூட பச்சைநிறக் கடையிலே பளிங்குச்சிலை போன்ற கட்டழகி ஒருத்தி இணைந்து கொண்டார் சுமார்பதினைந்து இருபது அழகிகள் இவ்வாறு இணைந்து ஆடி இந்நிகழ்ச்சியை நெஞ்சைவிட்டகலமல் செய்தனர்.

### கங்கைநதி ஓரம்

கொழும்பு மாநகரின் பிரசித்திபெற்ற இசைக்குழுவான ரிச்சர்ட்ஸ் பீரிஸ் அவர்களின் தலைமையிலான இசைக்குழுவே ''புளுஹவாய்''நிகழ்ச்சிக்கு பின்னணி இசை வழங்கினர். ''புளுஹவாய்'' இசை நடனத்தைஅடுத்துஇவ்விசைக் குழுவினர் ''கங்கைநதி ஓரம்'' ''அவள் ஒரு பச்சைக் குழந்தை...'' போன்ற தமிழ்ப் பாடல்களை செக்ஸபோனில் வாசித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர் இவர்கள் ஹிந்தி-சிங்கள இசையையும் வாத்தியங்களில் திறமையாக வாசித்தனர்.

### லிம்போ நடனம்

வானளாவஉயர்ந்ததென்னை மரங்கள் இரண்டையும்- மூங்கில் மரங்கள் இரண்டையும் மேடையில் நிறுத்தி அவைகள் மறையும்படிவண்ண நிற மின்குமிழ்களால் அவற்றுக்கு ஒளியூட்டியிருந்தனர் இந்த மேடையிலேயே புளுஹவாய் நடனம் இடம்பெற்றது. புளுஹவாயை அடுத்து லிம்போ நடனம் ஆரம்பமாகியது.

### கவர்ச்சி உடையில் நடனம்

அரையிலே ''பிக்னி''யுடனும் மார்புக் கச்சையுடனும் கட்டழகு வெளிப்பட நடனமிட்ட இளம் நங்கை ஒருத்தி நளினமான முறையில் பல சாகசங்களைச் செய்து காட்டினர். ஒளிரும் மெழுகுவர்த்திகளை அழகுக்கால்களிலும்- திரண்ட தோள்களிலும் ஏந்திநடனமிட்டாள். இரண்டு போத்தல்களின் மேல் நீண்ட கம்பி ஒன்றை வைத்து அதனை எரியூட்டியபின் அதன் கீழாக நிலத்தில் படுத்து ஊர்ந்துவந்து வாயில் இருக்கும் கோலையும் அத்தீயில் எரியூட்டி அதனைக் கவ்வியபடி கைகளில் தீப்பந்தங்களுடன் அந்தப் பருவச்சிட்டு நடனமாடுகையில் ஒளி வெள்ளத்தில் அவள் பொன்னுடல்பளிச்சுப்பளிச்செனமின்னியது இரசிகர்கள் ஆனந்த மிகுதியில் தம்நிலை மறந்துஆடி மகிழ்ந்துகொண்டிருந்தனர்.

### கருத்துரைகள்

அடுத்த நிகழ்ச்சிக்குஇரண்டு மணித்தியாலங்கள்காத்திருக்க வேண்டி இருந்தமையால்இந்த இடைவெளியுள் மைதானத்தில் நின்றிருந்த பொதுமக்களின் காணிவல் பற்றிய கருத்துக்களை அறியமுற்பட்டேன்.

எதிலுமே பெண்ணுக்கு முதலிடம் என்பார்கள். இதிலும் அவ்வழக்கத்தைக் கையாண்டு இளம்பெண் ஒருவரைப்பேட்டிகாண முயன்றேன்.

### "சர்க்கஸ் அபாரம்"

மஞ்சள் நிற பெல்பொட்டமும் சிவப்பு நிறச் சட்டையும் அணிந்து வந்திருந்த ஒரு அழகு மங்கையிடம் பேச்சுக்கொடுத்தேன். ''காணிவல் பற்றியஉங்கள் கருத்தென்ன? எனப் பேச்சைத் தொடங்கினேன். முதலில் பதில் சொல்ல மறுத்த மங்கை பத்திரிகை நிருபர் என்றதும் நாணப் புன்னகையை நல்கியபடி ''நன்ருக இருக்கிறது'' என்ருர். எது நன்ருக இருக்கிறது? என்றேன். எல்லாமே நன்ருக இருக்கிறதென்ருர். சிறப்பாகஒன்றைக்கூறுங்கள் என்றேன். ''சர்க்கஸ்அபாரம்'' என்ருர் அதில் உங்களைக் கவர்ந்த காட்சி ஒன்றைக் கூறுங்கள் என்றேன் தலையிலே சிறிய பூச்சாடி ஒன்றை வைத்து அதன்மேல் பெரிய மேசை ஒன்றை வைத்து அதன்மேல் பொருட்களை வைத்தபடி கையில் இரண்டு சிவப்புநிற நாடாக்களைப் பிடித்தபடி சீனக்காரிபோல் நடனமாடுவது என்ருர். உங்கள் பெயர் என்ன? என்றேன். பார்வைக்குராணி போலிருந்த அவள் அதை மட்டும்கூற மறுத்துவிட்டாள். இதனையடுத்து அழகான பச்சைநிற பெல்பொட்டத்துடன் நின்ற வாலிபன் ஒருவனை அணுகி அவனுடைய பெயரை முதலில் கேட்டேன் செபஸ்ரியாம்பிள்ளை கிறிஸ்ரியன் என்னும் இவ்வாலிபன் க.பொ.த.வகுப்பில் பயில்கின்ருன் கோவில் வீதிஒழுங்கையில் வசிக்கின்ருர். அவரிடம் காணிவல் பற்றிக் கேட்டபொழுது ''கராட்டி விளையாட்டுக்கள் சாண்டோ சகாஜங்கள் அபாரம்''என்ருர் மேலும் ''ராஜன் இசைக்குழு உரிமையாளரின் எட்டு வயது மகன் ''டிரம்'' அடித்தநிகழ்ச்சியையும் குறிப்பிட்டார். என்னுடைய பேட்டியைக் குழப்புவதுபோல் 60அடியில் இருந்து மங்கைபாயும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

### தீக்கிணற்றுள் குதிப்பு

60அடி உயரத்தில் ஏறி முகத்தின்மேல் கறுப்புச் சீலையைப் போட்டபடி தீகொழுத்துவிட்டெரியும் கிணற்றுள் தனக்குதானே தியூட்டிக் கொண்ட மங்கை ஒருத்தி குதித்தாள் பார்க்கவே மயிர்கூச்செறிந்தது.

### குமுளமூனை அந்தோனியார்

நேற்றைய எனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள அந்தோனியார் கோவில் வீதி நிதியானது குமுளமுனை அந்தோனியார் கோவிலுக்கே சேர்க்கப்படுகிறது. ஊர்காவற்றுறை எனத் தவருக குறிப்பிடப்பட்டுள்ள தென்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றேன்.

—பற்றிமாகரன்

## சங்கானை பட்டினசபை விசேட ஆணையாளர்

சங்கானை, புதன்

சங்கானைப் பட்டினசபையின் விசேட ஆணையாளராக திரு.ஆர்.தணிகாசலம் உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவர் இப்பட்டினசபையின் செயலாளராக இதுவரை கடமையாற்றிவந்தார்.

• • •

## விசேட ஆணையாளர்

காலி, புதன்

காலி மாவட்ட அரசாங்க அதிபர் திரு எஸ். எஸ். சிவானந்தன் வெலிகம நகரசபையின் விசேட ஆணையாளராக உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவினுல் நியமிக்கப்பட்டுள்ளார். (இ)



வேலர்: எங்கடை கதிர்காமருக்கு இரண்டு பொடியன்கள் ... ... என்ன செய்யிறுங்கள்

மயிலர்: படிச்சவன் பாணிக்கக்கல்லு கடத்துகிறுன், படியாதவன் மாடு கடத்துகிறுன்.

— சுந்தர்

## அமைச்சரவைக் கூட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க கூட்டுஸ்தாபன உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தாங்கள் நினைத்த மாதிரி அரசாங்க மற்றும் கூட்டுஸ்தாபன வாகனங்களை தங்களின் சொந்தப் பாவனைக்கு பயன்படுத்தமுடியாது! கடைக்குப் போவதற்கும், சந்தைக்குச் செல்வதற்கும், தங்களது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அழைத்துச்செல்வதற்கும் அரசு மற்றும் கூட்டுஸ்தாபன வாகனங்களை இவர்கள் உபயோகிக்கக்கூடாது என்றும் உத்தியோகபூர்வமான விஷயங்களுக்கு மட்டுமே வாகனங்களை உபயோகிக்கவேண்டும் என்றும் இன்று முடிவுசெய்யப்பட்டது.

### பத்திரிகைகளுக்கு விளம்பரம்

நாட்டின் சகல தேசியப் பத்திரிகைகளுக்கும் அரசாங்க, கூட்டுஸ்தாபன விளம்பரங்கள் வழங்கப்படும் பத்திரிகை விற்பனை தொகையைப் பொறுத்து விளம்பரங்களின் அளவும் அமைந்திருக்கும் என்றும் கட்சிப் பத்திரிகைகள் நிலையும் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் இன்றையக் கூட்டத்தில் தெரிவித்தார்.

### மாநகர, நகர சபைத் தேர்தல்

மாநகர, நகரசபைத் தேர்தல்கள் யாவும் அதிவிரைவில் நடைபெறும். 1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி மாநகரசபைகள் நகர சபைகள் செயல்படும் விதத்தில் இத்தேர்தல்கள் நேரகாலத்தில் நடைபெறும்.

### இணக்கசபைகள்

இணக்க சபைகள் மற்றும் விவசாய விசாரணைச்சபைகள் யாவும் திருத்தியமைக்கப்படும் சிலவேளை இவை ஒழிக்கப் படலாம்.

## வடபகுதி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் கூறியதாவது:

'' வடபகுதியில் அரசியல் தலையீடு இல்லாமல் கூட்டுறவு இயக்கம் திறமாக நடந்து வந்தது. ஆனல் அரசியல் தலையீட்டுக்குப்பின் நிலைமை மோசமாகியது. வீரசிங்கம் மண்டபம் மீண்டும் மக்கள் கையில் ஒப்படைக்கப்படவேண்டும். மண்டபத்திற்கு அருகில் கூட்டுறவுக் கலாசாலைக்குக் காணி ஒதுக்கப்பட்டது. ஆனல் எந்த வேலையும் நடைபெறவில்லை. அதனையும் செய்ய வேண்டும். மீண்டும் கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக வருவது யாழ்ப்பாணத்திற்கு ஒருவரப் பிரசாதமாகும்.

## காணிவல் நீடிப்பு

யாழ்ப்பாணம், வியா.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில்நிகழ்ந்துகொண்டிருக்கும் ரோட்டரிக்காணிவல் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (கி-அ)

## பொருட்களின் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் ஜனதாகட்சியின் தலைவர் சந்திரசேகர் இங்கு நடைபெற்ற மாதர் தொழிலாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

''எமது அரசாங்கம் ஏறிவரும் வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. மக்கள் மத்தியில் நியாயமான முறையில் பண்டங்கள் விநியோகிக்கப்படுவதற்கும்மக்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அரசு வர்த்தகத் துறையை வியாபிதப்படுத்துவதற்கும் இந்திய அரசு ஆவனசெய்யவுள்ளது'' என திரு. சந்திரசேகர் மேலும் பேசுகையில் கூறினர். (உ)

## இன்று

யாழ்ப்பாணம், வியாழன்

உரும்பராய் கிழக்கு ஞான வயிரவர் கோவிலடி சனசமூக நிலையம் புனருத்தாரணத்தையடுத்து இன்று மாலை 6 மணியளவில் புதிய மின் இணைப்பை கோப்பாய் தேசிய பேரவை உறுப்பினர் திரு.சி.கதிவேலுப்பிள்ளை ஆரம்பித்துவைப்பார்.

இதனையடுத்து பகிரங்கக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (அ)

●

யாழ்ப்பாணம், வியாழன்

மாதகல் புனித சூசையப்பர் மகாவித்தியாலய பெற்ருேர் ஆசியர் சங்க பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் இன்று நடைபெறவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகராசா சரஸ்வதி

திரு. சண்முகராசாவின் மனைவியாரும், 'சிரித்திரன்' உதவிஆசிரியர் யோகரத்தினம் (கவிஞர் ரதேயன்) ராஜேஸ்வரி விஜயலட்சுமி ஆகியோரது தாயாருமான திருமதி சரஸ்வதி காலமாகிவிட்டார். அன்னரின் ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை (11-8-77) 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 6824

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka;